**களனிப் பல்கலைக்கழகம் - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

களனிப் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின நிதிக்கூற்றுக்கள் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பெறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | 48 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 7,551,320 பெறுமதியான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவையில் உள்ள பொருட்கள் மற்றும் சேவை முன்பணங்களை விரைவாகத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவும் ரூபா 14,096,353 கூட்டுத்தொகையான டொலர் வைப்புக்கள் மற்றும் பாதுகாப்பு வைப்புக்களும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவும் வாசிகசாலை வைப்புக்கள் ரூபா 9,536,491 ஒழுங்குபடுத்தப்பட்டிருக் கவில்லை. | விலைக்கேள்வி மற்றும் பாதுகாப்பு வைப்புத்தொகைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் மேற்பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவு ம், 05 ஆண்டுகளுக்கு மேல் மீள செலுத்தப்பட வேண்டிய வேண்டிய நூலக வைப்புத்தொகைகளின் மதிப்பு 2024 ஆம் ஆண்டு வருமானத்தில் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 04(ii) ஆம் பிரிவு | இடைக்கால ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்காத 31 விரிவுரையாளர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 11,382,909 ஆய்வுக் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்டுள்ளது. | ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 06 மாதங்களுக்குள் முன்னேற்றத்தை சமர்ப்பிப்பதற்கான நிபந்தனையை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கடுமையாக எதிர்த்ததோடு, கொடுப்பனவு மானியம் அல்ல, சம்பளத்தின் ஒரு பகுதி என்று துணைவேந்தருக்கு அறிவித்ததுள்ளமை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்க மைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,322,233,673 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,613,377,751 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,291,144,078 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் மொத்த செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையை சரியாகக் கண்டறியாமல் 2012 | விசாரணைக் | குழு தேவையை |

| | | |
|---|---|---|
| முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எழுதுபொருட்கள் மற்றும் பராமரிப்புப் பொருட்கள் ஆகியவற்றின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்ளபடியான நகராத பொருட்களின் மதிப்பு ரூபா. 5,736,393 ஆகவும், மெதுவாக நகரும் பொருட்களின் மதிப்பு ரூபா 1,334,240 ஆகவும், சேதமடைந்த பொருட்களின் மதிப்பு ரூபா 401,834 ஆகவும் காணப்பட்டது. | நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக கண்டறிந்து பொருட்களை கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். |

**3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பலமைப்பரிசில் மற்றும் வெகுமதி நிதியங்களின் முதலீட்டிலிருந்து பெறப்பட்ட மொத்த வட்டி வருமானம் ரூபா 18,995,650 உரிய நோக்கங்களுக்காக செலவிடப்படாமல் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நிதியத்தின் பயன்பாட்டை அதிகரிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பல்கலைக்கழகம் முன்னெடுக்கின்றமை. | நிதியத்தை திறம்பட பயன்படுத்த வேண்டும். |

**3.3 செயற்திட்ட அல்லது மூலதனப் பணியிலான தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 4 மாடிகளை கொண்டிருந்த ஹெட்டியாவத்த பஞ்சாராமா விடுதி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை பல்கலைக்கழகத்தின் மற்றும் ஒப்பந்ததாரரின் கட்டுப்பாட்டை மீறிய காரணங்களின் அடிப்படையில் முடிவுறுத்துவதற்கு கல்வி அமைச்சின் பணிப்பாளரிடமிருந்து (உள்கட்டமைப்பு அபிவிருத்தி) 2021 யூன் 21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, ஒப்பந்தத்தை பாதியில் நிறுத்துவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டதன் காரணமாக ஒப்பந்ததாரருக்கு ரூபா 4,029,430 கூடுதலாக செலுத்த வேண்டியிருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் மாணவர்களுக்குத் தேவையான விடுதிக் கட்டிடம் கட்டப்படாமல் இருந்ததுடன், ரூபா 65,457,463 தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கை இரத்து செய்யப்படும் வரை செய்யப்பட்ட செலவினம், நடைமுறை வேலை கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | மாணவர்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக கட்டடத்தின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்து பயன்பாட்டுக்கு எடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைமை பாதுகாப்பு உத்தியோகத்தரால் 2021 நவம்பர் 30 ஆந் திகதி அன்று 9 கண்காணிப்பு கூடாரங்கள் தேவை என்று சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் மேலும் 8 கண்காணிப்பு கூடாரங்களின் தேவைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டன. முதல் கொள்வனவின் போது கண்காணிப்பு கூடாரமொன்றின் கிரயம் ரூபா 276,000 ஆன போதிலும், இரண்டாவது கொள்வனவின் போது அது ரூபா 521,000 ரூபாயாக அதிகரித்ததால், இரண்டாவது முறையாக கட்டப்பட்ட 7 கூடாரங்களுக்கு, ரூபா 1,715,000 கூடுதலாக செலவழிக்க நேரிட்டது. மேலும், கூடாரங்களின் கல்வனைஸ் தகரங்களின் தடிமன் எதிர்பார்த்த விவரக்குறிப்புகளிலிருந்து வேறுபட்டது. | 20 கண்காணிப்பு கூடாரங்கள் தேவைப்பட்ட போதிலும் நிதி நெருக்கடி காரணமாக முதலில் 09 கண்காணிப்பு கூடாரங்களும் பின்னர் 08 கூடாரங்களும் கொள்வனவு செய்யப்பட்டு பணிப் பொறியாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது. | அதிகபட்ச பொருளாதார நன்மைகளை வழங்கும் வகையில் பெறுகை செய்யப்பட வேண்டும் மற்றும் விவரக்குறிப்புகளுக்கு இணங்கக்கூடிய பொருட்களை மட்டுமே வாங்க வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வணிக முகாமைத்துவ பீடத்திற்கான 10 மாடி பீட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக தொழில்துறைக்கான ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனத்திற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆலோசனை சேவை கட்டணமாக மொத்தம் ரூபா 15,013,437 செலுத்தப்பட்டாலும், கட்டிடத்தின் கட்டுமான பணிகள் 2023 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்படவில்லை. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 மற்றும் 04/2022 அறிவுறுத்தல்களின்படி, அரசாங்கத்தின் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு வழங்கப்பட்டுள்ள காரணத்தால் ஒப்பந்தத்தின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. | உரிய அனுமதி பெற்று, கட்டடம் கட்டும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக, பல்கலைக்கழகத்தின் 6 கல்விப் பீடங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர கல்வி பதவியணி 829 ஆக இருந்த போதிலும், உண்மையான பதவியணி 690 ஆக இருந்ததுடன், இதில் 125 பேர் ஏழு ஆண்டு விடுப்பு மற்றும் கல்வி விடுமுறை எடுத்துள்ளனர். எனவே, பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 15310 மாணவர்கள் தங்கள் படிப்பை | மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஏழு ஆண்டு மற்றும் கல்வி விடுமுறைகள் முடிந்தவரை வழங்கப்படுகின்றன. | மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடையின்றி நடைபெறுவதற்கு போதிய கல்விசார் பதவியணியொன்று பராமரிக்கப்பட வேண்டும். |

தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் பாடத்திட்டத்தை மேற்கொள்வதற்கும் வெளி விரிவுரையாளர்களின் உதவியைப் பெற்று, மீளாய்வாண்டுக்கு மாத்திரம் வெளி விரிவுரையாளர் கட்டணமாக ரூபா.36,105,195 செலுத்தியுள்ளனர், இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 28 சதவீதம் அதிகரிப்பாகும்.